**வெள்ளிக்கிழமை (ஜும்ஆ) குத்பா உரை**

# தலைப்பு : கோடைக்கால வெப்பம் தரும் படிப்பினைகளும், பாடங்களும்

**நாள் : ரபீவுல் அவ்வல் 11448 ஹிஜ்ரி / 14/08/2026 கி.பி**

அனைத்துப் புகழும் நேர்வழியைத் தேடுபவருக்கு நல்வழிகாட்டுபவனும், தன்னை அழைப்பவருக்குப் பதிலளிப்பவனும், தன்னிடம் அடைக்கலம் கோரி அழைப்பவருக்கு உதவி செய்பவனுமாகிய அல்லாஹ்வுக்கே உரியது. அவன் யாரை வழிகேட்டில் விட்டுவிட்டானோ அவனுக்கு வழிகாட்டுபவர் யாருமில்லை; அவன் யாரை நேர்வழியில் செலுத்தினானோ அவரை வழிகெடுப்பவர் யாருமில்லை. {وَمَا بِكُمْ مِنْ نِعْمَةٍ فَمِنَ اللَّهِ ثُمَّ إِذَا مَسَّكُمُ الضُّرُّ فَإِلَيْهِ تَجْأَرُونَ} [النحل: 53] உங்களிடம் உள்ள அனைத்து அருட்கொடைகளும் அல்லாஹ்விடமிருந்தே வந்தவையாகும். பிறகு, உங்களுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால், அவனிடமே நீங்கள் முறையிடுகிறீர்கள். (அல் குர்ஆன் 16 : 53) மேலும், வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை; அவன் தனித்தவன், அவனுக்கு இணை துணை யாருமில்லை; அவன் தன் உயர்வில் பரிசுத்தமானவன் என்று நான் சாட்சியளிக்கிறேன். நிச்சயமாக முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும், அவனுடைய தூதரும், தேர்ந்தெடுக்கப்பட்டவரும், உற்ற தோழரும், மேன்மையானவரும் ஆவார்கள் என்றும் சாட்சியளிக்கிறேன். அல்லாஹ் அவருக்கும், அவரது குடும்பத்தாருக்கும், அவரது தோழர்களுக்கும், அவர்களைப் பின்பற்றியவர்களுக்கும், நாம் அல்லாஹ்வைச் சந்திக்கும் நாள் வரை ஏராளமான சாந்தியும் சமாதானமும் பொழிவானாக!

**இறைத் துதிக்குப் பின் :**

அன்பான அல்லாஹ்வின் அடியார்களே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்சி நடந்துகொள்ளுங்கள்.

{وَلْتَنْظُرْ نَفْسٌ مَا قَدَّمَتْ لِغَدٍ وَاتَّقُوا اللَّهَ إِنَّ اللَّهَ خَبِيرٌ بِمَا تَعْمَلُونَ} [الحشر: 18]

ஒவ்வோர் ஆத்மாவும் (மறுமை) நாளைக்காக எதனை முற்படுத்தி வைத்துள்ளது என்பதைப் பார்க்கட்டும்! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்! நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்கறிந்தவன். (அல் குர்ஆன் 59 :18)

**இறைநம்பிக்கையாளர்களே!**

நிச்சயமாக அல்லாஹ்வின் பேரறிவின் காரணத்தால், இந்த உலகத்தை சோதனைகளும், கஷ்டங்களும் நிறைந்த இல்லமாக அமைத்துள்ளான். இறைநம்பிக்கையாளர்களின் கீழ்ப்படிதலை வெளிப்படுத்தவும், நம்பிக்கையற்றவர்களின் கோபத்தையும் பதற்றத்தையும் வெளிப்படுத்தவுமே உலகத்தை சிரமங்கள் நிறைந்ததாகப் படைத்துள்ளான். அல்லாஹ் கூறுகிறான்: {لَقَدْ خَلَقْنَا الْإِنْسَانَ فِي كَبَدٍ} [البلد: 4] நிச்சயமாக நாம் மனிதனைச் சிரமத்திற்குள்ளேயே

படைத்துள்ளோம். (அல் குர்ஆன் 90 : 4) இந்தச் சோதனையின் ஒரு வெளிப்பாடே பருவகாலங்களின் மாற்றமாகும்; கோடையும் குளிரும் மாறி மாறி வருகின்றன. தெளிவான வானிலையைத் தொடர்ந்து தூசிகள் வீசுகின்றன; பாதங்களைச் சுட்டெரிக்கும் வெப்பமும், எலும்புகளை வதைக்கும் குளிரும் வருகின்றன. இவை அனைத்தும் மிக உயர்ந்த நன்நோக்கத்திற்காகவே அமைந்துள்ளன. இதன் பின்னணியில் உள்ள சான்றுகளையும் படிப்பினைகளையும் நாம் சிந்திக்க வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்: {يُقَلِّبُ اللَّهُ اللَّيْلَ وَالنَّهَارَ إِنَّ فِي ذَلِكَ لَعِبْرَةً لِأُولِي الْأَبْصَارِ} [النور: 44] அல்லாஹ் இரவையும் பகலையும் மாறிவரச் செய்கிறான். நிச்சயமாக இதில் சிந்தனையுடையோருக்குப் பெரும் படிப்பினை உள்ளது. (அல் குர்ஆன் 24 : 44)

**அல்லாஹ்வின் அடியார்களே!**

இந் நாட்களில் நாம் அனுபவிக்கும் கடுமையான வெப்பம் ஒரு தெளிவான சான்றாகும்; பகிரங்கமான அடையாளமாகும். இது பராமுகமாக இருக்கும் உள்ளங்களை விழிப்படையச் செய்கிறது; மறுமை நாளை நினைவூட்டுகிறது. மேலும், இவ்வுலகம் சுகபோகத்திற்கும், சோம்பலுக்கும் உரிய இடம் அல்ல, மாறாக இது சோதனைக் களம், கடின உழைப்பு மற்றும் அமல்களுக்குரிய இடம் என்பதை உணர்த்துகிறது. மனிதர்கள் தங்கள் மறுமைப் பயணத்திற்காக நன்மைகளைச் சேகரித்துக் கொள்ளவும், தங்கள் இறைவனைச் சந்திப்பதற்குத் தயாராகவும் இருக்க வேண்டும் என்பதை இது நினைவூட்டுகிறது.

{فِي يَوْمٍ كَانَ مِقْدَارُهُ خَمْسِينَ أَلْفَ سَنَةٍ} [المعارج: 4]

அந்நாளின் அளவு ஐம்பதாயிரம் ஆண்டுகளா இருக்கும். (அல் குர்ஆன் 70 : 4)

சுட்டெரிக்கும் சூரியனின் கதிர்களும், சுடாத நண்பகலில் வழியும் வேர்வையும் மறுமையில் மனிதர்களின் நிலையை நமக்கு நினைவூட்டுகின்றன. அந்நாளில் இறைவன் மனிதர்கள் அனைவரையும் ஒரே மைதானத்தில் ஒன்றுதிரட்டுவான். அப்போது சுமைகள் கடுமையாகும்; செய்திகள் மறைந்துபோகும்; சூரியன் அவர்களின் தலைக்கு மிக அருகில் கொண்டுவரப்படும்; பயம் அவர்களின் உள்ளங்களைக் கவ்விக்கொள்ளும்; சோதனைகள் பெரிதாகி, துன்பங்கள் இரட்டிப்பாகும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

« تُدْنَى الشَّمْسُ يَوْمَ الْقِيَامَةِ مِنَ الْخَلْقِ، حَتَّى تَكُونَ مِنْهُمْ كَمِقْدَارِ مِيلٍ، فَيَكُونُ النَّاسُ عَلَى قَدْرِ أَعْمَالِهِمْ فِي الْعَرَقِ، فَمِنْهُمْ مَنْ يَكُونُ إِلَى كَعْبَيْهِ، وَمِنْهُمْ مَنْ يَكُونُ إِلَى رُكْبَتَيْهِ، وَمِنْهُمْ مَنْ يَكُونُ إِلَى حَقْوَيْهِ، وَمِنْهُمْ مَنْ يُلْجِمُهُ الْعَرَقُ إِلْجَامًا»

மறுமை நாளில் சூரியன் படைப்பினங்களுக்கு மிக அருகில் கொண்டுவரப்படும்; அது எவ்வளவு அருகிலிருக்கும் என்றால் ஒரு 'மைல்' தொலைவில் இருக்கும். மனிதர்கள் தங்களின் அமல்களுக்கு ஏற்ப வேர்வையில் மூழ்கியிருப்பார்கள். சிலரின் கணுக்கால் வரை வேர்வை இருக்கும்; சிலரின் முழங்கால் வரை இருக்கும்; சிலரின் இடுப்பு வரை இருக்கும்; இன்னும் சிலரை வேர்வை கடிவாளம் போல் கவ்விக்கொண்டிருக்கும். அறிவிப்பாளர் கூறுகிறார்: "அல்லாஹ்வின் தூதர் (ஸல்)

அவர்கள் தம் கையால் தம் வாயைச் சுட்டிக்காட்டினார்கள்." (நூல் : முஸ்லிம் அறிவிப்பவர் : மிக்தாத் பின் அல்-அஸ்வத் (ரழி)

**இறைநம்பிக்கையாளர்களே!**

அந்நாளின் கடினமான சூழ்நிலையில், அகிலத்தின் அதிபதியான அல்லாஹ் தனது பேரருளால் ஒரு கூட்டத்தினரைத் தேர்ந்தெடுத்து, தனது அளப்பரிய கொடையை வழங்கி கண்ணியப்படுத்துவான். தனது அரியணையின் (அர்ஷின்) நிழலைத் தவிர வேறு எந்த நிழலும் இல்லாத அந்நாளில், சூரியனின் வெப்பத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றித் தன் நிழலில் புகலிடம் அளிப்பான். அல்லாஹ்விடம் அவனது விசாலமான அருளைக் கேட்கிறோம். அவர்களின் உயர்ந்த அந்தஸ்தையும் அழகிய நிலையையும் கண்டு மக்கள் பொறாமை கொள்வார்கள்; அவர்களின் நிழலின் ஒரு சிறு பகுதியையாவது பெற மாட்டோமா என்று ஏங்குவார்கள். ஆனால் அது சாத்தியமில்லை! ஏனெனில் அந்த நிழல் தீனாராலும் திர்ஹாமினாலும் (பணத்தினால்) விலைக்கு வாங்க முடியாத ஒன்றாகும். மாறாக, இரவிலும், பகலிலும் நல்லறங்களைப் புரிவதாலும், எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கோபத்தைத் தூண்டும் காரியங்களைத் தவிர்ப்பதாலும் மட்டுமே அதனைப் பெற முடியும். அதுவே நரகிலிருந்து தப்பிக்கும் உயிர் காக்கும் கவசமும், அந்தத் துயரத்திலிருந்து மீளும் வழியுமாகும்.

அந்நாளின் சுட்டெரிக்கும் வெப்பத்திலிருந்து தப்பிக்கும் வழிகளில் ஒன்று, அபூஹுரைரா (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடமிருந்து அறிவிக்கும் இந்த ஹதீஸ் புகாரி,முஸ்லிமில் வந்துள்ளது:

« سَبْعَةٌ يُظِلُّهُمُ اللهُ فِي ظِلِّهِ يَوْمَ لَا ظِلَّ إِلَّا ظِلُّهُ: الْإِمَامُ الْعَادِلُ،، وَشَابٌّ نَشَأَ بِعِبَادَةِ اللهِ، وَرَجُلٌ قَلْبُهُ مُعَلَّقٌ فِي الْمَسَاجِدِ، وَرَجُلَانِ تَحَابَّا فِي اللهِ، اجْتَمَعَا عَلَيْهِ وَتَفَرَّقَا عَلَيْهِ، وَرَجُلٌ دَعَتْهُ امْرَأَةٌ ذَاتُ مَنْصِبٍ وَجَمَالٍ، فَقَالَ: إِنِّي أَخَافُ اللهَ، وَرَجُلٌ تَصَدَّقَ بِصَدَقَةٍ فَأَخْفَاهَا، حَتَّى لَا تَعْلَمَ شِمَالُهُ مَا تُنْفِقُ يَمِينُهُ، وَرَجُلٌ ذَكَرَ اللهَ خَالِيًا، فَفَاضَتْ عَيْنَاهُ»

*(தனது நிழலைத் தவிர வேறு எந்த நிழலும் இல்லாத [மறுமை] நாளில், ஏழு நபர்களுக்கு அல்லாஹ் தனது நிழலில் புகலிடம் அளிப்பான்:

1. நீதமான ஆட்சியாளர்.

2. அல்லாஹ்வின் வணக்கத்தில் திளைத்த வாலிபன்.

3. பள்ளிவாசல்களோடு எப்போதும் மனதால் பிணைக்கப்பட்டிருக்கும் மனிதன்.

4. அல்லாஹ்வுக்காகவே நேசித்து, அவனுக்காகவே ஒன்றுசேர்ந்து, அவனுக்காகவே பிரிந்த இரு மனிதர்கள்.

5. அந்தஸ்தும் அழகும் உள்ள ஒரு பெண் தன் தேவைகளுக்காக அழைத்தபோதும், 'நிச்சயமாக நான் அல்லாஹ்வுக்கு அஞ்சுகிறேன்' என்று கூறிய மனிதன்.

6. தன் வலது கை செய்யும் தர்மத்தை இடது கை அறியாதவாறு இரகசியமாகத் தர்மம் செய்த மனிதன்.

7. தனிமையில் அல்லாஹ்வை நினைவுகூர்ந்து கண்ணீர் சிந்திய மனிதன்.)*

அளவற்ற அருளாளனின் நிழலைப் பெறுவதற்கான காரணங்களில் ஒன்று: கடனைத் திருப்பிக் கொடுக்கச் சிரமப்படுபவருக்கு அவகாசம் அளிப்பதும், தவணை வரும்போது கடனைக் குறைத்து மன்னிப்பதுமாகும். இதுவே அரசர்களுக்கெல்லாம் அரசனான அல்லாஹ் நம் குற்றங்களை மன்னிப்பதற்குக் காரணமாக அமைகிறது. அபுல் யஸர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் : «مَنْ أَنْظَرَ مُعْسِرًا أَوْ وَضَعَ عَنْهُ؛ أَظَلَّهُ اللهُ فِي ظِلِّهِ» [أخرجه مسلم] யார் சிரமப்படுபவருக்கு அவகாசம் அளிக்கிறாரோ அல்லது அவரது கடனைத் தள்ளுபடி செய்கிறாரோ, அல்லாஹ் அவரைத் தனது நிழலில் புகலிடம் அளிக்கச் செய்வான். (நூல் : முஸ்லிம் )

**அல்லாஹ்வின் அடியார்களே!** அவற்றுள் இன்னொன்று: அல்லாஹ்வுக்காக நேசிப்பதும், அவனது திருப்தியை நோக்கமாகக் கொண்டு ஒன்று கூடுவதுமாகும். இதில் உலகியல் நோக்கங்களோ, சுயநலன்களோ இருக்காது. இவர்கள் மார்க்கத்தையே தங்களின் நேசத்திற்கும் வெறுப்பிற்கும் அளவுகோலாகக் கொண்டவர்கள்; ஈமானையே தங்களின் சகோதரத்துவப் பிணைப்பாகக் கொண்டவர்கள். இதனால் அவர்கள் உண்மையான, நிலையான அன்பை அனுபவித்ததுடன், உயர்ந்த சுவர்க்கத்தில் அதன் நிழல்களின் கீழ் இன்புற்றிருப்பார்கள். அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

«إِنَّ اللهَ يَقُولُ يَوْمَ الْقِيَامَةِ: أَيْنَ الْمُتَحَابُّونَ بِجَلَالِي؟ الْيَوْمَ أُظِلُّهُمْ فِي ظِلِّي، يَوْمَ لَا ظِلَّ إِلَّا ظِلِّي» [أخرجه مسلم]

மறுமை நாளில் அல்லாஹ் கூறுவான்: "எனது கண்ணியத்தின் பெயரால் ஒருவரையொருவர் நேசித்துக்கொண்டவர்கள் எங்கே? எனது நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத இன்றைய தினத்தில், அவர்களுக்கு எனது நிழலில் புகலிடம் அளிக்கிறேன்." (நூல் : முஸ்லிம் )

அந்நாளின் சுட்டெரிக்கும் வெப்பத்திலிருந்தும், கடுமையான குளிரிலிருந்தும் காப்பாற்றும் செயல்களில் ஒன்று: அனைத்து வகையான தர்மங்களாகும். தர்மம் செய்பவர், தனது நற்செயலின் கூலியாக அல்லாஹ்வின் நிழலால் கண்ணியப்படுத்தப்படுவார். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

«إِنَّ الصَّدَقَةَ لَتُطْفِئُ عَنْ أَهْلِهَا حَرَّ الْقُبُورِ، وَإِنَّمَا يَسْتَظِلُّ الْمُؤْمِنُ يَوْمَ الْقِيَامَةِ فِي ظِلِّ صَدَقَتِهِ» [أخرجه الطبراني وصححه الألباني]

நிச்சயமாகத் தர்மமானது அதனைச் செய்பவர்களுக்குக் கப்ரின் (மண்ணறையின்) வெப்பத்தைத் தணிக்கும். மேலும், நிச்சயமாக ஒரு மூமின் மறுமை நாளில் தனது தர்மத்தின் நிழலிலேயே புகலிடம் பெறுவான்.(நூல் : தப்ரானி)

எனது இந்த உரையை நிறைவு செய்து, எனக்காகவும், உங்களுக்காகவும், அனைத்து முஸ்லிம்களுக்காகவும் மகத்தான அல்லாஹ்விடம் அனைத்துப் பாவங்களிலிருந்தும் மன்னிப்புக் கோருகிறேன்.

## இரண்டாம் உரை

அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. அவன் தேர்ந்தெடுத்த அவனது அடியார்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக!

**இறைத் துதிக்குப் பின் :**

அல்லாஹ்வின் அடியார்களே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொள்ளுங்கள். உங்களது நேரங்களை நற்காரியங்களால் தூய்மைப்படுத்துங்கள்; ஆயுளை வணக்க வழிபாடுகளில் முதலீடு செய்யுங்கள்; உங்களது நாட்களை நன்மைகளால் நிரப்புங்கள்.

**உண்மையான இறைநம்பிக்கையாளர்களே!**

கோடைகாலத்தின் வெப்பம் தன்னைத் தாக்கினாலும், அல்லாஹ்வின் விருப்பத்தையும் திருப்தியையும் நோக்கி விரைந்து செயல்படுபவனே உண்மையான மூமின் ஆவான். தன் ரஹ்மானைப் திருப்திப்படுத்துவதற்காக தொழுகையின் பக்கம் விரைவான்; தன் நன்மையையும் தக்வாவையும் (இறைபக்தியையும்) அதிகப்படுத்திக் கொள்ள வணக்க வழிபாடுகளின் பக்கம் விரைவான். இவனே உயர்ந்த அந்தஸ்துகளைப் பெற்ற புத்திசாலி; மறுமையின் சுட்டெரிக்கும் மைதானத்தின் வெப்பத்திலிருந்து தன் உடலைப் பாதுகாத்துக் கொண்ட விவேகியான மனிதன் ஆவான்.

ஆனால், வானிலையின் வெப்பம் காரணமாகச் சோம்பல்பட்டு தொழுகைகளில் கலந்துகொள்ளாமலும், நண்பகல் வெயிலைக் காரணம் காட்டிக் கொண்டு ஜுமுஆ மற்றும் ஜமாஅத் தொழுகைகளைப் புறக்கணிப்பவனும் எவனோ, அவன் பலவீனமானவனும் துரதிர்ஷ்டவசமானவனும் ஆவான். அவனது மனமே அவனுக்குத் தவறான வழியைக் காட்டியுள்ளது; ஷைத்தான் அவனை ஏமாற்றிவிட்டான். அகிலத்தின் அதிபதியான அல்லாஹ்வின் வழிபாட்டைப் புறக்கணித்த நயவஞ்சகர்களின் நிலைக்கு சமமாகுவதோடு மட்டுமில்லாமல், இறைநம்பிக்கையாளர்களின் கூட்டத்திலிருந்தும் அவன் விலகிவிட்டான். அவர்களின் நிலையைப் பற்றியும் பேச்சுக்களைப் பற்றியும் தெளிவுபடுத்தி அல்லாஹ் கூறுகிறான்:

{ فَرِحَ الْمُخَلَّفُونَ بِمَقْعَدِهِمْ خِلَافَ رَسُولِ اللَّهِ وَكَرِهُوا أَنْ يُجَاهِدُوا بِأَمْوَالِهِمْ وَأَنْفُسِهِمْ فِي سَبِيلِ اللَّهِ وَقَالُوا لَا تَنْفِرُوا فِي الْحَرِّ قُلْ نَارُ جَهَنَّمَ أَشَدُّ حَرًّا لَوْ كَانُوا يَفْقَهُونَ} [التوبة: 81]

அல்லாஹ்வின் தூதருக்கு மாறுசெய்து (போருக்குச் செல்லாமல்) பின் தங்கிவிட்டவர்கள், தாம் உட்கார்ந்து கொண்டதைப் பற்றி மகிழ்ச்சியடைகிறார்கள். மேலும், அல்லாஹ்வின் பாதையில் தங்கள் செல்வங்களாலும் உயிர்களாலும் ஜிஹாத் செய்வதை வெறுத்து, "இந்த வெப்பத்தில் போருக்குச் செல்லாதீர்கள்" என்றும் கூறினார்கள். (நபியே!) நீர் கூறுவீராக: "நரகத்தின் நெருப்பு இதைவிடக் கடுமையான வெப்பமுடையது!" அவர்கள் விளங்குபவர்களாக இருந்தால் (இதனைப் புரிந்து கொள்வார்கள்). (அல் குர்ஆன் 9 : 81)

இதேபோல், தங்கள் குடும்பத்தினரையும் குழந்தைகளையும் கண்ணியமாகப் பராமரிப்பதற்காக இந்த வெப்பத்தையும் பொருட்படுத்தாமல், ஹலாலான

(அனுமதிக்கப்பட்ட) வாழ்வாதாரத்தைத் தேடி உழைக்கும் தொழிலாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் மகத்தான கூலியும், உயர்ந்த அந்தஸ்தும் வாக்களிக்கப்பட்டுள்ளது. கஅப் பின் உஜ்ரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் தோழர்கள் ஒரு மனிதரைக் கடந்து சென்றார்கள். அவரது சுறுசுறுப்பைக் கண்டு வியந்து, "அல்லாஹ்வின் தூதரே! இது அல்லாஹ்வின் பாதையில் (ஜிஹாதாக) இருந்திருக்கக்கூடாதா?" என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

إِنْ كَانَ خَرَجَ يَسْعَى عَلَى وَلَدِهِ صِغَارًا، فَهُوَ فِي سَبِيلِ اللهِ، وَإِنْ كَانَ خَرَجَ يَسْعَى عَلَى نَفْسِهِ يُعِفُّهَا، فَهُوَ فِي سَبِيلِ اللهِ» [أخرجه الطبراني، » وصححه الألباني]

அவர் தனது சிறு குழந்தைகளுக்காக உழைக்கப் புறப்பட்டிருந்தால், அது அல்லாஹ்வின் பாதையில்தான் சேரும்; அல்லது தன்மானத்தோடு வாழ தன் சுய தேவைகளுக்காக உழைக்கப் புறப்பட்டிருந்தாலும், அதுவும் அல்லாஹ்வின் பாதையில்தான் சேரும். (நூல் : தப்ரானி)

**இறைநம்பிக்கையாளர்களே!**

கோடைகாலத்தின் இந்த வெப்பம், அல்லாஹ் நமக்கு அளித்த அருட்கொடைகளை நினைவுகூர ஒரு காரணமாக அமையட்டும். வெப்பத்தைத் தடுக்கும் இந்தக் கட்டிடங்களையும், ஏராளமான குளிர்சாதனக் கருவிகளையும் அவன் நமக்கு வசப்படுத்தித் தந்துள்ளான். எனவே, இவற்றை வழங்கிய இறைவனுக்கு நன்றி செலுத்துவதில் நாம் முந்திக்கொள்வோம். அதன்பிறகு, இவற்றைச் சரியாகப் பராமரிப்பதிலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இணைந்து சிக்கனமாகப் பயன்படுத்துவதிலும், வீணடிப்பதைத் தவிர்ப்பதிலும் நாம் கவனம் செலுத்துவோம்.

அதேவேளையில், இந்த நிழல் வசதிகள் எதுவுமின்றி கடுமையான வெப்பத்தில் அவதிப்படும் மக்களின் துன்பங்களையும் நாம் உணர வேண்டும். கிணறுகளை வெட்டுதல், நிழல்தரும் கூடாரங்கள் மற்றும் வீடுகளைக் கட்டுதல், குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் குளிர்விப்பான்களை வாங்கிக் கொடுத்தல் ஆகியவற்றின் மூலம் அவர்களின் தாகத்தை தணிக்கவும் வறுமையை போக்கவும் நாம் உதவ வேண்டும். அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

بَيْنَمَا رَجُلٌ يَمْشِي، فَاشْتَدَّ عَلَيْهِ الْعَطَشُ، فَنَزَلَ بِئْرًا فَشَرِبَ مِنْهَا، ثُمَّ خَرَجَ، فَإِذَا هُوَ بِكَلْبٍ يَلْهَثُ، يَأْكُلُ الثَّرَى مِنَ الْعَطَشِ، فَقَالَ: لَقَدْ بَلَغَ هَذَا مِثْلُ » «الَّذِي بَلَغَ بِي، فَمَلَأَ خُفَّهُ، ثُمَّ أَمْسَكَهُ بِفِيهِ، ثُمَّ رَقِيَ، فَسَقَى الْكَلْبَ، فَشَكَرَ اللهُ لَهُ، فَغَفَرَ لَهُ

ஒரு மனிதர் வழியில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது அவருக்குக் கடுமையான தாகம் எடுத்தது. அவர் ஒரு கிணற்றில் இறங்கி நீர் அருந்திவிட்டு வெளியே வந்தார். அங்கே ஒரு நாய் தாகத்தால் நாவைத் தொங்கவிட்டபடி ஈர மண்ணைக் கவ்விக் கொண்டிருப்பதைக் கண்டார். அம்மனிதர், 'எனக்கு ஏற்பட்ட அதே தாகப் பிரச்சனை இந்த நாய்க்கும் ஏற்பட்டுள்ளது' என்று கூறி, மீண்டும் கிணற்றில் இறங்கித் தன் காலணியில் நீரை நிரப்பி, அதைத் தன் வாயால் கவ்விக்கொண்டு மேலே ஏறிவந்து அந்த நாய்க்கு நீர் புகட்டினார். அல்லாஹ் அவரது நற்செயலை ஏற்றுக்கொண்டு அவரது பாவங்களை மன்னித்தான். தோழர்கள்: "அல்லாஹ்வின் தூதரே! பிராணிகளுக்கு உதவுவதிலும் எங்களுக்கு நன்மை உண்டா?" என்று

கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்: « فِي كُلِّ كَبِدٍ رَطْبَةٍ أَجْرٌ» [متفق عليه] உயிருள்ள ஒவ்வொரு பிராணிக்கு உதவும் விஷயத்திலும் நன்மை உண்டு) என்று கூறினார்கள்.(நூல் : புகாரி, முஸ்லிம் )

யா அல்லாஹ்! பிரகாசமான முகமும் ஒளிரும் நெற்றியும் கொண்ட எங்கள் நபி (ஸல்) அவர்கள் மீது சாந்தியும் சமாதானமும் பொழிவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களில் ஈமானை (இறைநம்பிக்கையை) நேசமிக்கதாகவும் அழகியதாகவும் ஆக்குவாயாக! குஃப்ர் (இறைநிராகரிப்பு), பாவங்கள், மாறுசெய்தல் ஆகியவற்றை எங்கள் உள்ளங்களுக்கு வெறுப்பாக ஆக்குவாயாக! எங்களை நேர்வழி பெற்றவர்களாக ஆக்குவாயாக! யா அல்லாஹ்! இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! ஷிர்க்கையும் (இணைவைப்பையும்) இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது மார்க்கத்திற்கும், உனது வேதத்திற்கும், உனது நபியின் சுன்னாவுக்கும், உனது மூமின்களான அடியார்களுக்கும் உதவியளிப்பாயாக! யா அல்லாஹ்! முஸ்லிம்களான ஆண்கள், பெண்கள், மூமின்களான ஆண்கள், பெண்கள் அவர்களில் உயிருடன் இருப்பவர்கள் மற்றும் மரணித்தவர்கள் அனைவரையும் மன்னிப்பாயாக! யா அல்லாஹ்! நாட்டின் பாதுகாப்பைப் பேணும் எங்கள் சகோதரர்களைப் பாதுகாப்பாயாக! எங்கள் அமீர் (ஆட்சியாளர்) மற்றும் அவரது வாரிசு இளவரசருக்கும் உனது நேர்வழியைத் தந்து அருள்வாயாக! அவர்களின் செயல்களை உனது கீழ்ப்படிதலிலும் திருப்தியிலும் அமைப்பாயாக! இந்த நாட்டை அமைதியும், நிம்மதியும், வளமும், ஈமானும் நிறைந்த பாதுகாப்பான பூமியாக ஆக்குவாயாக! மேலும் அனைத்து முஸ்லிம் நாடுகளையும் பாதுகாப்பாயாக!

**(வெள்ளிக்கிழமை குத்பா தயாரிப்புக் குழு)**